நாடார் குல மித்திரன்.

1927 வரு பிப்ரவரி மீ 21 உ

## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

3-ம் பிரிவு-9-வது அத்தியாயம்.

மகாத்மாகாந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் ஜீவியசரிதை பின்வருமாறு:—

நான் சுகவாழ்வு வாழ்ந்துவர ஆரம்பித்திருந்தேன். ஆனால் அந்தப் பரீக்ஷை அதிககாலம் நீடித்திருக்கவில்லை. நான் வெகு ஜாக்கிரதையாகத்தான் வீட்டிற்கு வேண்டிய தளவாட சாமான்களை வாங்கிப்போட்டிருந்தேன். இருந்தாலும் சாத்தியப்படவில்லை. ஆகையால் சுகவாழ்வு வாழ்ந்துவர ஆரம்பித்த பிறகு வீட்டுச்செலவுகளைக் குறைத்துக்கொள்ள ஆரம்பித்தேன். வண்ணான் கூலி அதிகமாக இருந்தது. தவிரவும் அவன் காலத்திலும் வருவதில்லை. 2, 3 டஜன் ஷர்ட்டுகளும், காலர்களும் போதவில்லை. காலர்களை ஒவ்வொருவரும் மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது ஷர்ட்டுகளை தினந்தோறும் மாற்றிக்கொண்டிராவிட்டாலும் ஒன்றுவிட்டொரு நாளேனும் மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. இதுசெலவைஇரட்டித்தது. இது அனுவசியமென்று நான் நினைத்து இந்தச் செலவைக் குறைத்துக்கொள்ளுவதற்காக சலவைக்கருவிகளை வாங்கி வைத்துக்கொண்டேன். துணிகளைச் சலவை செய்வதைப்பற்றிய ஒரு புத்தகமிருந்தது. அதை வாங்கிப் படித்து, சலவை செய்யத் தெரிந்துகொண்டேன். என்னுடைய சமசாரத்திற்கும் அதைச் சொல்லிக் கொடுத்தேன். இதனால் என்னுடைய வேலை அதிகரித்தது. இருந்தாலும் இந்த வேலை புதிதாக இருந்ததால் இதைச் செய்வது இன்பமாக இருந்தது.

நானே முதன் முதலாக வெளுத்த காலரின் விருத்தாந்தத்தை நான் மறந்து விடுவதற்கில்லை. அவசியத்திற்கு அதிகமாக மாவைப் போட்டுவிட்டேன். பெட்டியையும் சரியாகச் சூடுவைக்கவில்லை. அதிகமாக அழுத்தினால் காலர் எரிந்து போய்விடுமென்ற பயத்தினால் அழுத்தமாகப்பெட்டிபோடவில்லை. இதன் பலனாக காலர் பிடிப்பாக இருந்தபோதிலும் அதிகப்படியாகவிருந்த மாவு உதிர்ந்துகொண்டிருந்தது. இந்தக் காலரைப் போட்டுக்கொண்டு கோர்ட்டுக்குப் போனேன். ஏனைய பாரிஸ்டர்கள் பரிகாசம் செய்வதற்கு இடமேற்பட்டது. அந்தக் காலத்திலும் பிறர் பரிகாசம் செய்வதைப் பொறுத்துக்கொள்ளும் சுபாவம் எனக்கிருந்து வந்தது.

"இப்பொழுதுதான் முதல் தடவை நானே சலவைசெய்து பரீக்ஷை பார்த்திருக்கிறேன். அதனால் தான் மாவு உதிர்ந்து கொண்டிருக்கிறது. எனக்கு அதனால் உபத்திரவமில்லை. உங்களுக்குப் பரிகாசத்திற்கும் ஒரு விஷயம் அகப்பட்டது" என்று நான் பதில் சொல்லிவிட்டேன்.

"ஆனால் இங்கு சலவை ஸ்தலங்களுக்குக் குறைவில்லையே?" என்றார் ஒரு நண்பர்.

"சலவைச் செலவு அதிகம்பிடிக்கிறது. ஒரு காலரைச் சலவை செய்ய அதன் கிரயத் தொகையைக் கூலியாகக் கேட்கிறார்கள். அப்படிக் கொடுத்தாலும் வண்ணானுக்கு இஷ்டப்பட்டபோதுதான் அது திரும்பி வருகிறது. ஆகையால் நானே சலவை செய்துகொண்டுவிடுவது உத்தமமென்று நினைக்கிறேன்" என்று சொல்லிவிட்டேன்.

"தன்கையே தனக்குதவி" யென்னும் தர்மத்தின் விசேஷத்தை என் நண்பர்கள் அறிந்து கொள்ளும்படி செய்ய என்னால் முடியவில்லை. நாளடைவில் என் சொந்தத் துணிகளைச் சலவை செய்து கொள்ளுவதில் நான் நிபுணத்துவம் அடைந்துவிட்டேன். என் சொந்தச் சலவை கெடுதலாகவுமிருக்கவில்லை. என்னுடைய காலர்கள் பிடிப்பாகவும் பளபளப்பாகவுமே இருந்தன.

கோகலே தென்னாப்பிரிக்காவிற்கு வந்திருந்தபொழுது மகாதேவ கோவிந்தரானடே அவருக்கு சன்மானம் செய்திருந்த கழுத்துக் குட்டையைக் கொண்டு வந்திருந்தார். அப்பெரியார் கொடுத்த பரிசை அவர் பூஜிதையாக வைத்துக்கொண்டு, அபூர்வமாகவே உபயோகித்து வந்தார். ஜோஹன்ஸ்பர்க் இந்தியர்கள் அவருக்கு ஒரு விருந்து நடத்தியபோது அதை அவர் உபயோகித்துக்கொள்ள வேண்டியிருந்தது. அது மடிப்பு விழுந்திருந்தது. பெட்டிபோட வேண்டியிருந்தது. சலவைச்சாலைக்கு அனுப்பி உடனே திரும்பத் தருவிப்பதற்கு சாத்தியமில்லை. நானேபெட்டிபோட்டுக் கொடுப்பதாகச் சொன்னேன். "வக்கீல் தொழிலில் உங்களுக்கு சாமர்த்தியமுண்டென்று நான் நம்புவேன். வண்ணாத் தொழிலில் உங்களுக்குப் பரிச்சயமுண்டென்று நான் நம்பமுடியாது" என்று கோகலே சொன்னார். "நீங்கள் அதைக் கெடுத்து விட்டால் என்ன செய்வது? அது என்னுடைய பெரிய சொத்தென்று நான் நினைத்திருக்கிறேன்" என்றும் அவர் சொன்னார்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் ரானடே அதைப் பரிசாகக்கொடுத்த விருத்தாந்தத்தை அவர் சொன்னார். இருந்தாலும் நான் நன்றாகப் பெட்டிபோட்டுத் தருவதாகச் சொல்லி பெட்டிபோட்டுக்கொடுத்து, அவருடைய நற்சாட்சிப் பத்திரத்தைப்பெற்றேன். உலகத்தில் மற்றவர்கள் எனக்கு நற்சாட்சிப்பத்திரம் கொடுக்காவிடில் எனக்கு இப்பொழுது அக்கரையில்லை.

வண்ணாருக்கு அடிமையாக விருந்ததிலிருந்து நான் விடுவித்துக் கொண்டதுபோல் நாவிதர்களிடமிருந்தும் நான் விடுதலை செய்துகொண்டேன். இங்கிலாந்திற்குச் செல்லுகிறவர்கள் முகக்ஷவரம் செய்துகொள்ளவாவது தெரிந்து கொள்கிறார்கள். ஆனால் மயிரைக் கத்தரித்துவிட்டுக் கொள்ள எவரும் தெரிந்து கொண்டதாக நான் கேள்விப்பட்டதில்லை. நான் அதையும் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. நான் தலை மயிரைக் கத்தரித்துவிடும் ஆங்கிலேயர் ஒருவரிடம் பிரிட்டோரியாவில் சென்று, மயிரைக் கத்தரித்துவிடச் சொன்னேன். அவர் என் மயிரைக் கத்தரித்துவிட மறுத்துவிட்டார். அது என் மனதிற்குக் கஷ்டத்தை விளைவித்தது. உடனே கத்திரியொன்றை வாங்கி, கண்ணாடியைப் பார்த்துக்கொண்டு மயிரை வெட்டிவிட்டுக் கொண்டேன். முன் பக்கத்தில் சரியாக கத்திரித்துக்கொண்டு விட்டேன். பின் பக்கத்தில் சரியாகச் செய்து கொள்ளத்தெரியாமல் கெடுத்துக்கொண்டு விட்டேன். கோர்ட்டிலிருந்த நண்பர்கள் அதைப்பார்த்து சிரித்தார்கள்.

"உங்கள் தலைமயிருக்குஎன்னஆபத்து வந்துவிட்டது? எலி வெட்டி விட்டதா?" என்று அவர்கள் கேட்டார்கள்.

"இல்லை. வெள்ளைப்பரியாரி என்னுடைய கறுப்பு மயிரை கத்தரித்துவிட மாட்டாராம். ஆகையால் நானே வெட்டி விட்டுக்கொண்டேன். கெடுதலாகவிருந்தாலும் பாதகமில்லை" யென்று நான் சொன்னேன்.

இதைக்கேட்டு அவர்கள் ஆச்சரியப்படவில்லை. நாவிதர் மீது பிசகில்லை. கறுப்பு மனிதர்களுடைய மயிரை அவர் வெட்டி விட்டால் அவருடைய பிழைப்புப்போய்விடும். தீண்டாதவர்களுக்கு நமது நாவிதர்கள் க்ஷவரம் செய்ய நாம் அனுமதிக்கிறோமா? அதன் பலன் எனக்கு தென்னாப்பிரிக்காவில் கிடைத்தது. அது பலதடவை கிடைத்தது. நாம் செய்த பாபத்தினால் தான் இந்த சிக்ஷை கிடைத்ததென்று நான தேறுதல் செய்துகொண்டதால் கோபமடையவில்லை. "தன் கையேதனக்குதவி" யென்னும் தர்மத்தை எவ்வளவு அதிகமாகவும் நான் அனுஷ்டித்தேனென்பதை அந்தந்த சந்தர்ப்பத்தில் சொல்லுகிறேன். ஆனால் அதற்கு விதை வெகுகாலம் முன்பே விதைத்தாகிவிட்டது. அது வேர் விழுந்து, பூத்துக் காய்க்கஜலம் தான் விடவேண்டியிருந்தது. அந்த வேலை காலாகாலத்தில் நடந்து வந்தது.

## உயர்தரப் பள்ளிக்கூடங்களின் நோக்கமு மாக்கமும்.

### பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்தது.

(முன் தொடர்ச்சி)

"கான மயிலாடக் கண்டிருந்த வான் [கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—
தானுந் தன்
பொல்லாச் சிறகை விரித் தாடினாற்"

போலும்,

"மென்கால் சிறையன்னம் வீற்றிருந்த [மென்மலரைப்
புன்காகங் கொள்ளத்தான் போனாற்"

போலும், உயர்தரத் திண்ணைப்பள்ளிக்கூடங்கள் வைத்து நிர்வாகிக்க ஆற்றல் இல்லாத சில அதிகாரிகளும், அவையாரும் ஷை பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்துள்ளார். கைப்பொருளில்லாதான் காதலியை நாடி யலைக்கென்பனும்? கையெழுத்திடுதற்கு நிகமான எழுத்தறியாத வித்தகசிகாமணிகளே! அப்பள்ளிக்கூடங்கட்கு அதிகாரிகளாகவும் பேதமையே பெருங்கலையுணர்ந்த பேரறிவாளரும், வாசிக்கமட்டும் அறிந்தவராயினும் அதிகாரிகளுக்குவப்ப நடந்து தொண்டுபுரிபவரும் ஆசிரிய வகுப்பினராகவும், வருஷத்தில் வேலை யொழிந்த சில மாதங்களில் வீட்டிற் சோம்பியிருக்கும் சிறுவர்களே மாணவர்களாகவும் இப் பள்ளிக்கூடங்களுக் கமைகின்றார். மாட்டுத்தொழுவங்களுக்குச் சமமான கூடங்களும் விடுதிகளும், குச்சில்களும் பள்ளிக்கூடங்களாகின்றன. அதிகாரிகளும், ஆசிரியர்களும் மாணவர்களும் இத்திறப்படுவார் என்றக்கால் இவர்கட்குகந்த தலைமையாசிரியர் எத்திறத்தினராதல் வேண்டும்? "மண்ணாங்கட்டி மாப்பிள்ளைக்குத் தெருப்புழுதி சந்தனம்" அத்தலைமையாசிரியர்தான் என்ன தொழிற் செய்வர்? பிறரை என்ன தொழிற் செய்யவுவர்? ஆசிரியரும் மாணவரும் எத்தகைய மரியாதை தந்துகொள்ளப் பள்ளிக்கூடமாகிய வண்டியை ஒட்டுவிப்பார்? என்ற வினாக்கள் எழ அவற்றிற்கு விடை பகர்ந்தால் அந்தோ! அவலம்!! அவலம்!!! ஆசிரியருடைய சம்பளத்தாரிப்பைப் பார்த்தால் கல்வியினுங் கடின நெஞ்சினை இராவணனுமிரங்குதிரான். மெட்ரிக்கியுலேஷன் கற்றும்போதனை முறை பயின்று தேரிய என் நண்பர் ஒருவர் பதினைந்து ரூபாய்க்கு வேலை ஒப்புக்கொண்டு அரிய தம் முயற்சியின்பால் இருபது ரூபாய் பெற்றுவருகின்றார். இப்பெருந்தொகையையும் காலாகாலத்தில் பெறுவாரென்பது சந்தேகம். நிற்க கற்பித்தற் குதவியாய் நிற்கும் உபகரணங்கள் போதியவளவு வேண்டும். வாயுமானி, உஷ்ணமானி முதலிய கருவிகளைப் பிரத்தியக்ஷமாய்க் காண்பிக்காமல் அவற்றைப்பற்றி என்ன கற்பிக்கக்கூடும்? கற்பிக்கும் ஆசிரியருக்குந் தொல்லை, கற்பிக்கப்படும் மாணவக்குப் பயன் யாதொன்றில்லை. இரண்டாயிரத்துக்க திகமான ரூபாய் செலவு

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

## ஜீவகாருண்யப் பகுதி.

(கூழிபிறை, சிவனடியார் திருக்கூட்டம்)

### கொன்று தின்பது நன்றன்று.

கொன்று தின்பது நன்றெனச் சொல்லும் தமிழ் நாட்டுத் தாய்தந்தையர்களே! உங்களால் செய்ய முடிந்ததையே நாங்களும் வேண்டுகின்றோம். நீளமாக எழுதிக் கொண்டு போவானேன்? கொன்று தின்பது கூடாது. இன்றுமுதலே இத்தொழிலை நிறுத்திவிடுங்கள். இது ஒரு பெரிய மலையா? அல்லது கடக்கமுடியாத கடலா? எல்லாம் உங்களுடைய மனந்தான் காரணம். நாம் சிறுவர்களாய் இருக்கும்பொழுது என்னென்னவோ வெல்லாம் செய்தோம். வர வர இளமையில் செய்தவைகளை வெறுக்கின்றோமல்லவா? இதுபோல் மாறுதல் என்பது இயற்கைதான். 'நாங்கள் இதுவரையிலும் கொன்று தின்றுவந்த பழக்கத்தை விட முடியவில்லையே' என்று சொல்ல இடமில்லை.

இன்று உலகத்திலே குடிகாரர்களுக்கு மதிப்பில்லை. புலால் உண்பவர்களையும் உலகம் வெறுக்கின்றது. மாமிசம் உண்பவர்களைப் போற்றி வந்த காலமெல்லாம் மலையேறிவிட்டது. கள்ளுண்பதும், புலாலுண்பதும் ஒன்றென்பதே அறிவு உள்ளவர்கள் எண்ணமாயிருக்கின்றது. குடிகாரர்களோ தாங்கள் செய்வது தவறென்று உணர்கின்றார்கள். ஆனால் மாமிசம் உண்ணும் அன்பர்களே! உங்களுடைய தந்திரங்களை அவர்களும் [illegible]யாண்டு ஊக்கமடைகின்றனர். நீங்கள் மரத்திலும், குளத்திலும், காட்டிலும், மேட்டிலுமாக மனம்போல் தெய்வங்களை உண்டாக்கிக்கொண்டு, ஆடுகளையும் கோழிகளையும் கொன்று தின்னுகின்றீர்கள். அவர்களோ அதிகப்படியாகக் கள்ளைக் குடம்குடமாக வைத்துப் படைத்து வயிற்றுக்குள் அடைத்து மகிழ்கின்றனர். இம்மாதிரி செய்பவர்கள் நமது நாட்டிலே தாழ்ந்தவர்களென்று சொல்லிவரும் பள்ளர் பறையர் என்ற ஜாதியார்களாவர்கள். 'ஏழை மக்களே! இதென்ன அறிவீனம்! இம்மாதிரி செய்யாதீர்'களென்றால், எங்களினும் மேல் எனப்படுவோர்கள் நிறுத்தினால், நாங்களும் செய்யவில்லை என்கின்றனர். இவைகளை எழுதவா வேண்டும்? அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

எனவே மீண்டும் உங்களை வேண்டுகின்றோம். சாராயமும், இறைச்சியும் தின்னும் மேல்நாட்டார்கூட, புலால் உணவை நீக்கி வரும் இந்நாளிலே, ஞானம் கல்வி கருணை சாந்தம் நிறைந்துள்ள நாம் இன்னும் புலால் உண்போமாயின், மிகமிக வெட்கமான செயலாகும். பெரியோர்களே! கல்விமான்களே!! ஆலயம் கடவுள் என்று சொல்லி ஏழை ஆடு கோழிகளைக் கொலை செய்யாதிருக்க இன்றே கங்கணங் கட்டிக்கொள்ளுங்கள். உடலுக்கு உறுதியும், அறிவு வளர்ச்சியும் தரவல்ல தானியங்களையும், காய் கனிகளையும் உண்டு மகிழுங்கள். உங்கள் மக்களையாவது இனி இக்கொடுமையினின்றும் விலக்குங்கள்.

எல்லா வுயிர்களும் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல இறைவனை வணங்குவாம்.

### கொல்லா விரத ஆனந்தக் களிப்பு.

வந்தே மாதா மென்போம்—என்ற மெட்டு.

நீங்கள் புலாலை மறுப்பீர்—உங்கள்
நித்திரை தன்னிலும் உயிர்ப்பலி வெறுப்பீர்
வேலவன் றன்கொடிச் சேவல்—தவன்
வீறுட னேறிடும் ஆடிவை கொன்று
சாலவும் ஆவலோடுண்டால்—அவன்
றன்னருள் உங்களுக் கெவ்வகையுண்டாம்
காவிவேோர் முன் முனை தைத்தால்—உடன்
கதறி ஐயோவெனக் கடவுளை அழைப்பீர்
வேலினும் வாளினு முயிரைக்—கொன்று
வீழ்த்திடின் எத்தகைத் துன்புறும் அவைகள்
வாழிய எவ்வுயிர் தாமும்—இந்த
வையகத் தென்றிறைவன் படைத்துள்ள
ஏழை யுயிர்களின் மீது—வைர்க்
கிரக்கமின் றேஅவர்க் கேனிரக்கான்
பேயென்ப தொன்றென்று மில்லை—மனப்
பேதைமை யுள்ளவர்க் கேயவையுண்டாம்
தாயவெண் ணீறணி வோர்க்கு—பேயின்
துன்பமோர்காலும் வாராது மெய்யே
கோவணம் வெண்ணீ றணிந்தாலும்—அக்கம்
கோடி தரிப்பினும் நீயபுலாலை
வேட்டு யிரைக்கொன்று தின்னும்—கெட்ட
வீணர்கள் நிரா கத்தின்னுள் மாய்வார்
தேவதைக் கொன்றுயிர் கொன்னு—உங்கள்
தேகங் கொழுத்திடத் தின்னு வீராகில்
பாவமின்றென் றெண்ணி னீரோ—மென்
பாசத்தி னுற்பிணித்தே கொடு செல்வான்
தேனுங் கனிகளும் பாலும்—பல
தின்றற் கிருக்க அவற்றை விரும்பா
தானும் புலாலையும் உண்டால்—உமக் [வேன்
குற்றிடும் பேதைமைக் கென்னென்று சொல்
மேலைத் திசைவதி வோரிற்—பெரும்
மேதை யுற்றோர்பலர் ஊனுணவை விட்டுச்
சீவக்கனிகளும் காயும்—மிகத்
தின்னுதலே நலமென் றுரைக்கின்றார்
நீடிய வன்மையோ டாயுள்—இவை
நித்தியம் ஊனுணும் சிங்கம் புலிக்கோ
கூடிய புல்லோடு காயும்—கனி
கொண்டுண்டு வாழ்கரிக் கோ என்று தேரீர்
ஆண்டவன் அண்மையில் செல்ல—உமக்
காவலிருந்திடும் ஆசைற் புலாலை
வேண்டியுண் ணுதீர்கள் ஊனுண்—தனை
விட்டிடுமா றெவர்க்குஞ்சொல்லுவீரே. (நீங்)

# நாடார் மகாஜன சங்கம்

## அங்கத்தினர் விசேஷக் கூட்டம்.

### கோரமில்லாமல் நேரம் மாறுதல்.

### தலைவர் தேர்தலில் தர்க்கம்.

### பொருளபிவிருத்தி செய்வதில் பலத்த விவாதம்.

### தாவரச் சொத்துக்கே தக்க ஆதரவு.

(நமது விசேஷ நிருபரிடமிருந்து.)

12—2—27 காலை 9 மணிக்கு மதுரை டவுன் ஹாலில் நாடார் மகாஜன சங்கம் அங்கத்தினர் கூட்டம் கூடவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் சரியாய்ச் செய்யப்பட்டிருந்தன. 10 மணி வரையில் (மதுரை) உள்ளூர் அங்கத்தினர்கள் கூட சரியாய் வந்து சேரவில்லை. 12 மணிக்கு வடக்குச் செக்கு ரெயிலிலிருந்து சில வெளியூர் அங்கத்தினர்கள் வந்தார்கள். பிரஸிடெண்டு வரவில்லை. வைஸ் பிரஸிடெண்டு ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடார் அன்னைலே மதுரைக்கு வந்திருந்தும் தேக அசௌக்கியத்தால் 3 மணிக்கு வரக்கூடுமென்று அறிவித்திருந்தார். கூட்டம் கோரமாவதற்கு நூறு பேர்கள் இல்லையாகையால் நேரத்தை 3 மணிக்கு ஒத்திவைத்து சாப்பாட்டுக்குப் போய்விட்டார்கள்.

மீண்டும் 4 மணிவரையும் கோரமாகவில்லை. வைஸ் பிரஸிடெண்டும் வர முடியவில்லை. 5 மணிக்கு 118 அங்கத்தினர்கள் ஆஜராயிருந்தார்கள்.

வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள்:— விருதுநகர் ஸ்ரீமான்கள் மு. ச. பெ. செந்திக்குமார நாடார், வே. வ. சண்முக நாடார், சங்கரபாண்டிய நாடார், பிரகாசம், க. பெ. சங்கரலிங்க நாடார், அருப்புக்கோட்டை ரு. ஆ. முத்து நாடார் "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், ஆ. சொக்கலிங்கபாண்டியர் ஷை உப பத்திராதிபர், உடுமலைப்பேட்டை ராமசாமி நாடார், கோயமுத்தூர் பழனிக்குமார நாடார், மதுரை மா. வே. பழனிச்சாமி நாடார், பாண்டிய நாடார், ஆ. அ. ஆறுமுக நாடார், பொன்னுச்சாமி நாடார், புன்னைவனப்ப நாடார், எ. பொன்னையா நாடார் பி. எ., உசிலம்பட்டி ப. வீ. ஆதிமூத்துமாலை நாடார், தூத்துக்குடி அரி. அ. ச. ஆறுமுகச்சாமி நாடார் ஆகிய மற்றும் அனேகருளர்.

அக்கிராசனர், உப அக்கிராசனர் வராமையால் கூட்டத்திற்கு வந்திருப்பவர்களில் யாரைத் தலைவராகத் தெரிந்தெடுப்பதென்ற ஒரு சங்கை யுண்டாயிற்று. நிதானத்துடன் சபையை ஒழுங்காக நடத்துவதற்குச் சரியான ஒருவரைத் தெரிந்தெடுப்பது அவசியமென்பதை அவசரமாக ஆலோசிக்க வேண்டியதாக வேற்பட்டது. விருதுநகர் ஸ்ரீமான்கள் தே. பி. சங்கரலிங்க நாடார், பிரகாசம் முதலியவர்கள் "நாடார் குல மித்திரன்" பத்திராதிபரிருக்குமிடத்துக்கு வந்து நீங்கள் தான் இந்த நேரத்திற்குத் தலைமை வகிக்கப் பொருத்தமென்று நினைக்கிறோம்; தாங்கள் சட்டாமலொப்புக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதற்கவர் சம்மதிக்கவில்லை. மீண்டும் வற்புறுத்தினர். பின் ஸ்ரீமான் பொன்னையா நாடார் தான் தக்சமயம் பொருத்தமென்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஸ்ரீமான் செந்திக்குமார நாடார் வெகு அவசரமாக எழுந்து ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமி நாடார் பெயரைக் குறிப்பிட்டார். ஸ்ரீமான் வே. வ. சண்முக நாடார் ஆமோதித்தார். உடனே ஸ்ரீமான் தே. பி. சங்கரலிங்க நாடார் எழுந்து ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமி நாடார் தலைவராயிருக்கக் கூடாதென்பதற்கு சில காரணங்களைச் சொல்லி மறுத்துவிட்டு, ஸ்ரீமான் பொன்னையா நாடார் பெயரைக் குறிப்பிட்டார். அதை ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமி நாடாரே ஆமோதித்தார். ஒருவர் இரண்டையும் ஓட்டுக்கு விட வேணுமென்றார். மற்றொருவர் அப்படி விட்டுப் பார்க்கலாமென்றார். கொஞ்சம் பரபரப்பேற்பட்டது. ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார், உசிலம்பட்டி ஸ்ரீமான் ப. வீ. ஆதிமூத்துமாலை நாடாரவர்கள் பெயரைத் தலைவர் பதவிக்குக் குறிப்பிட்டார். மற்றொருவர் ஆமோதித்தார். இக்குறிப்புப் பொருத்தமென்பதற்கறிகுறியாக சபையில் அமைதியேற்பட்டதுடன் தலையசைப்பும் காணப்பட்டது. ஆனால் விருதுநகர் தேர்தல் விரோதம் இங்கேயும் வந்து நுழைகிறதைக் கண்டோ, வேறு காரணத்தினாலோ அவர் தலைமை வகிக்க மறுத்து விட்டார். அப்போது இந்தும் இன்று என்ன நடக்குமோவென்று சற்றச்சமுற்றாலும் தைரியமுள்ளவர்கள் சற்றும் தளர்வடையவில்லை. இத்தேர்தலிலேயே இவ்வார்ப்பாட்டமானால் அத்தேர்தலில் என்ன அமளிதோன்றியிருக்குமென்ற சிலர் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தனர். இதனால் ஜனங்களுக்குள் வரவரத் தெளிவுண்டாகிற தென்றுங் கூறலாம். ஸ்ரீமான் க. பெ. சங்கரலிங்க நாடார் தமக்குப் பிடித்தமான ஒருவர் பெயரைக் குறிப்பிடலாமேயொழிய முன் குறிப்பிடப்பட்டவரைக் குறை கூறியதும் மறுத்ததும் ஒழுங்கில்லையென்றும், அதை வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டும் அல்லது அதைப்பற்றி முதலில் கண்டனம் செய்ய வேண்டுமென்றும் ஸ்ரீமான் ஆறுமுகச்சாமி நாடார் குறிப்பிட்டார். ஸ்ரீமான் செந்திக்குமார நாடார் அது தான் சரியென்றார். உடனே ஸ்ரீமான் க. பெ. சங்கரலிங்க நாடார் தாம் தவறுதலாகச் சொன்ன வார்த்தைகளை வாபீஸ் வாங்கிக் கொண்டு மீண்டும் ஸ்ரீமான் பொன்னையா நாடார் பெயரையே குறிப்பிட்டார். ஏகமனதாய் கரகோஷம் செய்யப்பட்டது. ஸ்ரீமான் பொன்னையா நாடார் தலைமை வகித்தார்கள். காரியதரிசிகள் வாசித்த ஸ்காலர்ஷிப் கமிட்டியின் அறிக்கை ஏகமனதுடன் ஒப்புக்கொள்ளப்பட்டது. அடுத்த தீர்மானத்தைப் பற்றி அக்கிராசனர் அவரவர்களுடைய அபிப்பிராயங்களைப் பற்றிக் கேட்கும்போது ஸ்ரீமான் க. துரைச்சாமி நாடார், ஏழை மாணவர்கள் சகாய நிதியை, மதுரையில் வீடு, கடை முதலிய தாவரச் சொத்துக்கள் வாங்கி விருத்தி செய்வதே நலமென்றும், நம் முன்னோர்கள் சகல தர்மஸ்தாபனங்களையும் சொத்துக்கள் வருவாயினாலே தான் சரிவர விருத்தியாக்கிக் கொண்டு வந்திருக்கிறார்களென்றும், தற்போது மதுரையில் நல்ல சொத்துக்கள் விலை மலிவாகக் கிடைக்குமென்றும் பேசினார். ஸ்ரீமான் ச. பெ. சங்கரலிங்க நாடார் ஆமோதித்து சாமிக்காளை நாடார் ஆதரித்தார். கூட்டம் முழுதும் சொத்து வாங்குவதற்கே ஆதரவு காட்டுவது போல் காணப்பட்டது. ரொக்கமாகப் பாங்கில் போட்டு வைக்க வேண்டுமென்ற அபிப்பிராயமுடையவர்கள் சிலரிருந்தாலும் எழுந்து தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லச் சங்கோசப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சிலர் சொத்து வாங்குவதென்பது தான் முடியும்; எப்படியானாலென்ன; எல்லாம் நன்மைக்கெனவுமிருந்தனர்.

"நாடார் குல மித்திரன்" உப பத்திராதிபர் ஸ்ரீமான் சொக்கலிங்கபாண்டியர், நாடார் பாங்கில் ஒரு டைரக்டருக்குள்ள ரூபாய் 10000 த்தைக் கொண்டு பங்கு எடுத்துவிட்டு மீதத் தொகைக்குச் சொத்து வாங்கலாமென்று ஒரு திருத்தம் கொண்டு வந்து பேசியதாவது.— "நாடார் பாங்கு வைக்கவேண்டுமென்று நாடார் மகாஜன சங்கம் கான்பரன்ஸே தீர்மானித்தது. நாடார் பாங்கு, லாபத்தில் பத்திலொரு பாகத்தை நாடார் மகாஜன சங்கத்திற்குக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறது. இப்போது அதைத் தாச்சிறிது சண்டைகளிருப்பினும் தருவதற்கு சந்தேகமில்லையென்றும் சிலர் தாராளமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சங்கமும் ஒரு டைரக்டர் பங்கெடுத்துக் கொண்டால் தருவதாகச் சொல்வது உண்மையாவென்று பார்த்து விடலாம். மேலும் பாங்கினுடையவும், சங்கத்தினுடையவும் விருத்திக்கும் நேசத்திற்கும் சாதகமாயிருக்கும். நாடார் சமூகத்தின் பொருளாதார விருத்திக்கு நாடார் பாங்கு இன்றியமையாதென்பதை நாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம். நாடார்களின் மதிப்புக்கு அது ஒரு அளவு கோலாயுமிருக்கிறது. நாடார்களுக்கெல்லாம் பொதுவென்றே நாடார் பாங்கெனப் பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாடார்களில் ஏழைகளுங் கூட பங்காளியாகலாமென்றே பங்கு ஒன்றுக்கு பத்து ரூபாயாக ஏற்படுத்தியிருக்கிறது. ஆகையால் நாடார் பாங்கில் 1000 பங்கு எடுத்துக்கொள்வது பல நன்மைக்கே துகரமாயிருக்கும்" என்று பேசி முடித்தார். அருப்புக்கோட்டை நண்பர் க. அருணாசல நாடார் அதை ஆமோதித்தார். ஸ்ரீமான் க. துரைச்சாமி நாடார் அதை ஆட்சேபித்துப் பேசியதாவது:— வர்த்தக முறையில் பணத்தை யாரிடமும் கொடுத்து வைக்கக் கூடாதென்றும், அதனால் பல அபாயங்களுண்டாகலாமென்றும், சிதம்பர மகமைப் பணம் ரொக்கமாக 40000 ரூபாய் இருந்தது இப்போது எந்நிலைமையிலிருக்கிறதென்றுங் கூடத் தெரியவில்லையென்றும் அதன் விபரத்தைக் கேட்கும் உரிமை கூட மறுக்கப்படுகிறதென்றும், பொதுத் தர்ம விருத்திக்கு சொத்துதான் சரியானதென்பதற்குப் பல காரணங்களுண்டென்றும் சொல்லி முடித்தார்.

ஸ்ரீமான் சொக்கலிங்கபாண்டியர் எழுந்து "சொத்து வாங்க வேண்டாமென்றாவது, சொத்தில் நன்மையில்லையென்றாவது நான் சொல்லவில்லை. நமக்கென்றிருக்கும் நாடார் பாங்கில் ஒரு பாகத்தைப் போட்டு வைத்து விட்டு மீதத்திற்கு சொத்து வாங்கலாமென்றுதான் சொல்கிறேன். நாடார் பாங்கில் போடுவதில் என்ன கஷ்டம் வந்துவிடும்? சொத்துவருமானம் போலவே அதில் வட்டி வரக்கூடும். விசேஷ லாபங்கிடைக்கவும் வழியுண்டு. அதனால் பல நன்மைகளுமிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொருவரும் தீர்க்காலோசனை செய்து தங்களுக்குச் சரியென்று தோன்றுவதில் தாங்கள் ஓட் செய்ய வேண்டு"மென்று கேட்டுக் கொண்டார். அப்போது சபையில் பலர் இதுவே சரியென்று நினைத்தார்கள். முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்தவரிடம் திருத்தத்தை ஒப்புக் கொள்ளும்படியும், ஒப்புக் கொண்டால் விவாதமின்றி ஏகமனதாய் நிறைவேறிவிடுமென்றுங் கூறினும் அவர் சம்மதிக்கவில்லை. ஸ்ரீமான் சொக்கலிங்கபாண்டியர் திருத்தம் பலருக்கும் பொருத்தமாகக் காணப்பட்டாலும் அதை வற்புறுத்திப் பேசுவதற்கு மேற்கொண்டாட்கள் முன் வரவில்லை. நாடார் பாங்கு லாபத்திற் பத்திலொரு பாகத்தை வாக்களித்தபடி கொடுக்கவில்லையென்று இதற்குக் காரணமாய்ச் சொல்லப்படுகிறது.

ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமி நாடார், நாடார் பாங்கிலரு 10000 மும் மீதத்தை வார்பாண்டில் (யுத்தக் கடன்) போட்டு வைக்கலாமென்றொரு பிரேரணையைக் கொண்டு வந்து பேசிய சாராம்சமாவது:— சொத்துக்கள் வாங்குவதில் சிறிது எனக்கனுபோகமுண்டு. ஒரு சமயம் சொத்துக்கள் ஒன்றுபாதியாக விலை குறைந்து விடுகிறது. வருமானமே யில்லாமலும் போய்விடுகிறது. அதை நிர்வகிப்பதிலும் கஷ்டமிருக்கிறது. பொதுச் சொத்துக்கள் மேற்பார்வை சரியின்றி பல கெட்டுப்போய் விட்டன. இராமநாதபுரம் பேட்டை பாதி பறிபோய் விட்டது. மதுரையில் கீழப் பேட்டை மேலப் பேட்டைகளில் பல விவகாரங்களால் சீர் கெட்டு வருமானமேயில்லாமற் கிடக்கிறது. இந்நிலைமையில் மேலும்மேலும் சொத்துக்களையே வாங்குவது உசிதமாயில்லை. நாடார் பாங்கில் சுமார் நூற்றுக்கு ஏழு வட்டி கிடைக்கும். வார்பாண்டில் ஆறு மாதத்துக்கொரு முறை வட்டி மொத்தமாக நாமிருக்குமிடஞ் சேடி வரும். பத்து வருஷத்தில் முதலையும் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். அப்போதிருக்கிற அபிப்பிராயப்படி எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்றார். இதை ஒருவர் ஆமோதித்தார்.

ஸ்ரீமான் க. துரைச்சாமி நாடார் அதையும் ஆட்சேபித்துப் பேசியதாவது:—ஸ்ரீமான் பழனிச்சாமி நாடாரவர்கள் நல்ல சொத்துக்கள் சகாயமான விலைக்கு வாங்கி நன்றாய் நிர்வாகம் நடத்திவருகிறார். நல்ல வாடகை கிடைக்கிறது; நல்ல நிலைமையிலுமிருக்கிறது. நன்மையுமிருக்கிறதென்பதை நானறிவேன். மேலப்பேட்டை கீழப்பேட்டை காரைப்பேட்டை முதலிய பல பேட்டைகளெல்லாம், நமக்கு வருமானத்திற்காக நம் முன்னோர்கள் வாங்கவில்லை. வியாபாரப் பாதுகாப்பிற்கும் தங்குவதற்கும் அமைத்த சாதனங்கள். அவைகள் மிக மலிவாகவும் இனாமாகவும் வாங்கப்பட்டவைகள். அவைகள் இப்போது அதிக வருமானத்திற்கேதுகரமாகவும் லக்ஷக்கணக்கில மதிப்பிடக் கூடியதாகவும் இருப்பதுடன் அப்பேட்டைகள் எல்லாம் நமதுயிருக்குப்பாதுகாப்பான கோட்டைகளாக விளங்குகின்றன. நம்முன்னோர்கள் நல்வாழ்வுக்குறைவிடமாயிருந்ததும் இருந்து வருவதும் அப்பேட்டைகளே. பேட்டைகளில்லாவிடின் நமக்கு இங்கே இடமேது? சொத்துக்கள் ஒரு காலம் க்ஷீணதிசையடைந்து விட்டாலும் மறுபடியும் அதை உயிர்ப்பிக்க முடியும். ரொக்கமாயிருந்தால் அதை வைத்திருப்பவன் செத்தால் அவன் மகனிடம் அதை வாங்கமுடியுமோ முடியாதோ வென்ற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. உதாரணமாக சிதம்பரம் மகமையை வைத்திருப்பவர்களே போதும். சிதம்பர மகமையை எடுத்துக் கொண்டவர்களை என்ன செய்தீர்கள்? யார் கேட்டார்கள்? என்ன பதில் வந்தது? யாராவது சொல்லமுடியுமா? சிதம்பரம் மகமையிலும் சொத்து வாங்கப்பட்டிருப்பவைகள் தான் கொஞ்சம் உயிரிருப்பதாகக் காணப்படுகின்றன. ரொக்கமாய் வைத்திருப்பவர்களுடைய நாணயம் கெட்டுப் போய்க்கொண்டேதான் வந்திருக்கிறது. எப்படிக்கெட்டாலும் உயிருடன் பணத்தைக் கொடுக்கச் சம்மதிக்கமாட்டார்கள் போலும். ஆகையால் பாங்கிலும் பாண்டிலும் போடவேண்டுமென்பதை நான் பலமாக ஆட்சேபிக்கிறேனென்று முடித்தார்.

அக்கிராசனர் ஸ்ரீமான் பொன்னையா நாடார் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சிறிது விளக்கலாமா வென்று கேட்டார். அக்கிராசனர் ஹோதாவில் பேசக்கூடாதென்ற சபையில் ஆட்சேபமுண்டாயது. பின்னர் தமது சொந்த ஹோதாவிற் பேசுவதாகச் சொல்லிக்கொண்டு, நாடார் சமூகப் பொது ஸ்தாபன ரொக்கப்பண்டுகளை முன்னோர்கள் நிர்வகித்துக்கொண்டுவந்த மனிதர்கள் சூட்சிகளையும், அவர்கள் வம்பு வழக்குகளையும், பொதுஜனங்களை மதியாமல் பொதுப்பணம் தனக்கென நினைத்துத் தகாவழி நடக்குந்தன்மைகளையும், பணங்களை வைத்துக்கொண்டிருப்பவர்களே தலைவர்களாகிக் கொள்வதையும், அவர்களை யாரும்வந்து பணம் கேட்காமலிருக்கும்படி அவர்கள் ஒன்றுசேர்ந்து கொள்வதையும், பணம் வைத்திருப்பவர்களில் ஒருவன் சற்றேமாளியாயிருந்தாலும் அவனிடங்கூடப் பணத்தை பொதுஜனங்கள் கேட்கக்கூடாமல் பணம் வைத்திருப்பவர்களெல்லாம் ஒன்றுகூடி தம் சகாவுக்கு உதவிசெய்து வருவதையும், இறாப்பினலவர்கள் செய்யும் பல சூட்சிகளையும், சிதம்பரமகமைச் சீர்கேட்டையும் விலக்கி விட்டு சொத்துவாங்கினால் எல்லா ரூபாய்க்கும் சொத்து வாங்கவேண்டும். பணமாயிருந்தால் நாடார் பாங்கில்ப்போட

(இதன் தொடர்ச்சி ... பக்கம் பார்க்க)

# நாடார்குலமித்திரன்

அக்ஷய ௵ மாசி ௴ ௰ ௳

## அங்கத்தினர்கள் கூட்டம்.

நாடார் மகாஜன சங்கம் விசேஷ அங்கத்தினர்கள் கூட்டமானது மாசி ௴ 1௳ மதுரை டவுன் ஹாலில் ஸ்ரீமான் ஏ. பொன்னையா நாடார், பி. ஏ. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க் கூடி இனிது முடிவுபெற்ற முழுப்பாகத்தைப் பிறிதோரிடத்திற் பிரசுரித்திருக்கின்றோம்.

சுமார் இரண்டாயிரம் அங்கத்தினர்களுக்கு மேற்கொண்ட ஒரு பெரிய சமூக சங்கத்தின் விசேஷக் கூட்டத்திற்கு வெளியூர்களிலிருந்து சுமார் இருபத்தைந்து அங்கத்தினர்களாவது விஜயம் செய்யாதிருந்தது மிகவும் விசனிக்கத்தக்கது. இதுவொரு முக்கியமான கூட்டமாகையால் எல்லோரும் வரத்தவறக்கூடாதென்று எற்கனவே நாம் எழுதியிருக்கிறோம். சங்கத்தின் சார்பிலும் அழைப்புப் பிரசுரங்கள் எங்கும் அனுப்பப்பட்டிருந்தன. மிக முக்கியமான காரியமென்று பத்திரிகைகளிலும் பற்பலர் அபிப்பிராயங்களும் கூறியிருந்தார்கள். எவ்வளவு முன்னறிவிப்புக் கொடுத்தும் கூட்டம் நேரமாவதற்கே மிகப்பிரயாசையாயிருந்ததென்றால் சமூக நிர்வாகம் எவ்வாறு சங்கடமின்றி நடக்கக்கூடும்? சங்க உத்தியோகஸ்தர்களோ தருமத்தை முன்னிட்டு அவர்களுடைய சொந்த அலுவல்கள் எவ்வளவிருந்தாலும் சமூக வேலைகளையும் பிரியமாய்ப் பார்த்து வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பலவகையிலும் ஒத்தாசை செய்ய ஜனங்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு ஒத்தாசை செய்ய எல்லோராலும் இயலாவிடினும் அவர்கள் செய்த வேலைகளை ஒப்புவிப்பதற்காகக் கூட்டிவைக்கிற கூட்டங்களுக்காவது வரக்கூடாதா?

தற்போதுள்ள நிர்வாகஸ்தர்கள் தங்களது தளராமுயற்சியினாலே ஒரு பெரிய காரியத்தை முடித்து நமது வாரிசுகளின் பிற்கால ஜீவியத்திற்கு வேண்டிய கல்வி விருத்திக்குரியசிறிதுபொருளாதாரத்தையுடன்சேர்த்து அப்பொருளையும் எவ்வாறு விருத்திசெய்வது நலமென்பதிலும் ஜனங்களின் சம்மதத்தைக் கேட்டு ஒரு தீர்மானத்துக்குவந்துவிட்டார்கள். அத்தீர்மானப்படி மதுரையில் நல்ல சொத்துக்கள் வாங்கி விருத்திசெய்யவுங்கூடும்.

அங்கத்தினர்கள் கூட்டத்தின் கவனத்துக்குமூன்று விஷயங்களும் அதாவதுசொத்துவாங்குவது,1. நாடார் பாங்கிலும் சொத்திலுமாகப் போட்டு வைப்பது 2. நாடார்பாங்கிலும் புத்தகடனிலும் போட்டு வைப்பது 3 இம்மூன்றில் ஸ்ரீமான் செந்தகலிங்க பாண்டியரவர்கள் கொண்டுவந்த திருத்தப்பிரேரணை நிறைவேற்றியிருந்தால் சங்கத்திற்கும் பாங்குக்கும் மிக்க அனுகூலமடைய வழிதிறந்து விடப்பட்டதாயிருக்கும். என்றாலும் அங்கத்தினர்கூட்டம் தீர்மானித்ததை ஒப்புக்கொண்டு காரியஞ் செவ்வனே நடைபெறவேண்டிய முயற்சியைச் சிறிதும் தயங்காமற் செய்ய அதிகாரிகட்குத் தூண்டுதல் செய்தலை நாம் நமது கடமையாகக் கொள்ளுகின்றோம்.

சொத்து வாங்குவதில் காலங் கடத்தாமலும் கவனங்குறையாமலும் நல்ல சொத்துக்களாய் அதிக வருமானம் வரத்தக்கதாய் நமது சமூகமனைத்தும் பார்த்துக் கேட்டிருப்பதுகொள்ளத் தக்கதாயுள்ள சொத்துக்களைவாங்கிநமது மாணவர்களுக்கும் கிராமப் பாடசாலைகளுக்கும் சீக்கிரம் பேருதவி செய்யவேண்டிய தவசியமாகையால் விசேஷ கவனமில் கூட்டம் கூட்டியாவது அங்கத்தினர்கள்கூட்டத்தின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர அதிகாரிகள் சிறிதும் தயங்காமல் முயற்சிசெய்வார்களென்று நம்புகிறோம் மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் வாக்களித்த பணங்களை விரைவில் கொடுத்தும்,படிக்கக்காத்திருக்கும் மாணவர்களுக்குப் பேருதவி செய்தும், சமூகப்பிரசாரங்களைத் தீவிரமாய் நடத்த வேலைத்திட்டங்கள் தயார்செய்தும் இவ்வாண்டில் கான்பரன்ஸ் இனிது நடைபெறவேண்டியமுயற்சியும் செய்து வைப்பார்களென்று நம்புகின்றோம்.

ஏழை பங்காளன் மகாத்மா காந்தி எப்ரல் மாதம் தென்னாடு விஜயம் செய்வதாக விருப்பதால் அச்சமயத்தில் நாடார் மகாநாடு நடத்த முயற்சித்தல் நலமாகும். காந்தியடிகள் திருநோக்கு நமது மகாநாட்டுக்கு நலந்தருமென்றே நம்புகின்றோம்.

---

## இலங்கைப் பிரயாணம்.

நாம் நமது "நாடார்குல மித்திரன்" க்ஷேமநிதியை முன்னிட்டு வடஜில்லாக்களில் சிலநாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்து வந்தோம். மற்றுமித ஜில்லாக்களுக்குஞ் செல்லமுடியாமல் அவசரமான ஜோலிநிமித்தம் திரும்பிவிட்டோம். நமது லாட்டரிப் பிரைஸ் எடுப்பதற்கு இன்னுமிரண்டு மாதங்களேயிருப்பதால் இலங்கைக்குச்சென்று சீக்கிரம் திரும்புவதாக வுத்தேசித்திருக்கின்றோம். காளது மாசி ௴ 13௳ வியாழக்கிழமை புறப்படுவதாக சகல எற்பாடுகளும் செய்துகொண்டிருக்கின்றோம். அங்கு நம்மித்திரன் க்ஷேமத்தைக் கருதிச் சுமார் இருபது நாளிருந்து வேலைசெய்வதாக வுத்தேசங்கொண்டுளோம். நமக்கு முன்னிரு பிரயாணங்களிலும் சகலவுதவியும் செய்த கொழும்பு, மற்றும் நாட்டுப்புறங்களிலுமுள்ள நாடார் மகாஜனங்கள் இம்முறையும் வேண்டிய உதவிசெய்து ஆதரிப்பார்களென்று பூரணமாக நம்பி நமது பிரயாணத்தை மிகுந்த சந்தோஷத்துடன் குறிப்பிடுகின்றோம்.

கொழும்பில் முன் மிக்க ஆதரவு கொடுத்து உபசரித்த ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையாநாடாரவர்கள் (26. நாரிஸ்ரோட்) மளிகையிலேதான் தங்கியிருப்போம். கொழும்பைத்தவிர நாட்டுப்புறங்களுக்கும் தோட்டக்காடுகளுக்கும் போகும்படி அவசியம் நேர்ந்தாலும் போகக்கூடும். ஆகையால் இலங்கைச் சந்தா நேயர்களும், குலாபிமானிகளும், நாடார் சமூகச் சங்கங்களும், பால்ய வாலிபநாடார் கோஷ்டிகளும் நமது பிரயாணத்தில் அதிகக் கவனம்வைத்து மித்திரனுக்கு மிகுந்த ஒத்தாசை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். நமக்கு கடிதம் எழுதுவோர் கொழும்பு 26 நெ. நாரிஸ்ரோடு ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடாரவர்கள் கம்பெனிக்கு எழுதுவார்களாக.

---

## சர்வதேச சம்பவங்கள்.

சீனாவின் நிலைமை உலகத்தவர் எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்து கொண்டிருக்கிறது. நாம் எழுதிக்கொண்டிருக்கும்போதே அங்கு விஷயங்கள் எவ்வித மாறுதலை அடைந்துவிடுமோ என்றஞ்சவேண்டிய அளவு விஷயங்கள் மிகு சிக்கலான நிலைமையில் இருக்கின்றன. இங்கிலாந்து அதி பொறுமையுடன் சகிப்புத்தன்மை காட்டி வருவதையே இங்கிலீஷ் பத்திரிகைகள் மிகுதியும் புகழ்ந்து கூறுகின்றன. சீனர்களுக்குள்ள பிளவு ஒவ்வோர் தினமும் ஒற்றுமையடையக் கூடிய குறிப்புகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. மஞ்சூரியாவிலுள்ளவர்கள் காண்டன் படைகளுக்கு உதவியளிப்பதாகச் செய்தியனுப்பியிருக்கிறார்கள். இங்கிலீஷ்காரர் தாங்கள் காலிசெய்து விட்டுவந்த பிரதேசங்களை மறுபடியும் பலாத்காரமாய்க் கைப்பற்றுவதை சீனர்களில் எக்கக்ஷியினரும் ஒப்புக் கொள்வதற்கில்லை. இதுவே அவர்களுள் ஒற்றுமையுண்டாகியிருக்கிறதென்று சொல்வதற் காதாரமாய் சொல்லப்படுகிறது. அந்நியர்களை அப்புறப்படுத்தி விடுவது பொதுவான ஓர் தேசிய சுதந்திரப் பெண்று சீனர்கள் எப்போதும் எண்ணும் இயல்புடையர்தானே. இங்கிலாந்தும் அமெரிக்காவுமே அதிகமாய் இக்கிளர்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்தாலும் இவ்விரு தேசங்களுடைய யுத்தக்கப்பல்கள் சீனக்கடல்களில் ஏராளமாய்க் குவிந்து கொண்டிருந்தாலும் மீண்டும் யுத்தம் உண்டாகிவிடுமோ என்ற பயத்தாலும் அப்படிப்பட்ட பெரும் பழிக்குத் தாங்கள் காரணமாயிருக்கக் கூடாதென்றுமே பல கஷ்டங்களையும் சீன சரித்திரத்திலேயே என்றும் தோன்றாத ஓர் முறையில் சமாளித்துக்கொண்டு போகின்றனர். எய்தவனை நோகவா அம்பை நோகவா என்பார்போல ருஷியர்களையே வெகு கடுப்பாய்த் தாக்கிப் பேசிவருகின்றனர்.

பிரஞ்சுக்காரர்களுக்கு அதிக இடையூறு இல்லாவிடினும் இந்தோசீன தீபகற்பத்தில் பர்மா எல்லைப்புறத்துக் கடுத்தாற்போல் அவர்களுக்குப்பாத்தியப்பட்ட பிரதேசத்தை பலமாய் அரண் செய்துகொண்டிருக்கின்றனர். ஜெர்மானியர்கள் சீனாவின் முக்கிய பட்டணங்களில் தாங்கள் குடியிருக்கும் வீடுகளில் 'ஜெர்மானியர்' என்று எழுதிய பலகைகளை தொங்கவைத்திருக்கிறார்களாம். இதனால் ஜெர்மானியர்களுக்கு சீனாவில் ஏதோ மரியாதை இருப்பதாகவே தெரிகிறது. சமீபத்தில் ஜப்பானிய கப்பல்படை ஒன்று துருக்கிக்குச் சென்றதும் துருக்கியர்களால் அன்பாய் வரவேற்கப்பட்டதும் ஒரு விசேஷ சம்பவமாகக் கருதப்பட்டு வருகிறது. ஜப்பானியரோ சீன விஷயத்தில் எப்பொழுதும்போல் நடுநிலைமை வகிப்பதாயும் இச்சந்தர்ப்பத்தில் சீனர்களின் போராட்டத்தைப் பொறுமையுடன் கவனித்து அவர்கள் ஓர் தயாள சிந்தையுடன் நடந்து கொள்ளப்போவதாயும் சொல்லியிருக்கிறார்கள். இத்தாலிக்கு இங்கிலாந்தின் அந்நிய காரிய மந்திரி மறுபடியும் ஓர் முறை விஜயம் செய்து முஸோலினியுடன் தனித்திருந்து சம்பாஷணை செய்ததாகத் தெரிகிறது. இதனின்றும் இங்கிலாந்தும் இத்தாலியும் நெருங்குகிறதுபோல ஜெர்மனியும் பிரான்சும் நெருங்கிச் சிநேகப் பான்மையுடன் நடந்துகொள்வதாகச் சொல்லப்படுகிறது.

அமெரிக்காவில் நைக்ராக்குவா என்னும் மாகாணத்தில் இரு கவர்ன்மெண்டுகள் ஏற்பட்டு ஒன்றோடொன்று போராடி வருவதில் மெக்சிக்கோ ஒரு புறமும் ஐக்கிய மாகாணம் ஒரு புறமும் உதவி செய்துவருவதாய்த் தெரிகிறது. ஐக்கிய மாகாண அமெரிக்கர் தங்கள் சுயஜாதியின் பாதுகாப்பின் பொருட்டு தங்கள் யுத்தக்கப்பல்களையும் ஆட்களையும் அனுப்புவதாகச் சொல்லுகிறார்கள். மெக்சிக்கோ இதை ஆக்ஷேபிக்கிறது. மெக்சிக்கோவுக்கும் அமெரிக்காவுக்கும் வேறு பலதுறைகளிலும் விவகாரங்கள் இருந்து வருகின்றன. இவ்விஷயங்களை சர்வதேச மஹாநாட்டுக்கு மத்தியஸ்தம் செய்துவைக்க விட்டுவிடலாமென்று தெரிகிறது. இந்தியாவில் புதிய சட்டசபைகள் 3-வது முறையாகத் திறந்து வேலை ஆரம்பித்திருக்கின்றன. இந்தியா சட்டசபைக்கு வி. ஜே. படேல் மறுபடியும் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். நமது தேசத்தைப் பொறுத்த விஷயங்கள் எப்போதும் போலுமே கவர்னர்களின் எதேச்சாதிகாரமாகவே நடைபெறுமென்று தெரிகிறது.

D. B. S.

---

## ஷண்முகவேல் நாடார் வாசகசாலை, தூத்துக்குடி.

இவ்வாசகசாலையின் தர்க்க சங்கம் 13—2—27-ல் ஸ்ரீமான் அரி. அ. க. துரைச்சாமிநாடார் அவர்கள் தலைமையில் கூடியது. அவ்சமயம் ஸ்ரீமான் சி. ச. பலவேச நாடார் அவர்கள் இந்தியாவும் மதமும் என்னும் பொருள்பற்றி நீண்ட நேரம் பிரசங்கம் வெகு உருக்கமாகப் பேசினார்கள்.

கற்பகத்தருவெனச் செப்பத்தகுந்த— சகல தேசத்தவருக்கும் உண்ண உணவளிக்கும்— பகவான் படைப்பில் திலமகன் முதமாக பெருந் தபோதனர்கள் வாழ்ந்த நாடு நம்மிந்திய நாடு. இதில் தோன்றியுள்ள மதங்கள் முதலியபலவற்றினைப்பற்றியுந்தொடர்வாக ஸ்ரீமான்களான எம். தேனுயிர்தநாடார், வெ. தி. அய்யம்பெருமான்நாடார் எஸ். சே. வி. ஆறுமுகநாடார், அரு. சு. அருணாசலம் முதலிய பலர் சுருக்கமாகவும் தெளிவாகவும் அர்த்த புஷ்டியுடனும் பேசினார்கள். பின்னர் அக்கிராசனர் முன்னுரையாக மதச்சண்டை ஒழிந்தாற்றான் நம்பாரத நாட்டில் அமைதி நிலவி எங்கும் ஒரே கடவுளிய அன்பு என்னும் சக்தியால் உலகம் சீக்கிரம் விடுதலையடையுமென்றும் அன்பே சிவம் அருளே சிவசக்தி என்னும் உண்மையைச் சீக்கிரம் எம்மதத்தினரும் கடைப்பிடித்து ஒழுகவர வேண்டுமென்றும் பின்னுரையாக நம் வாசகசாலைக்குக் கையாட்டினம் ஸ்ரீமான்களான அ. ச. நடராஜநாடார் அவர்களாலும் எ. மு. நாராயணநாடார் அவர்களாலும் பஞ்சு ஸ்ரீமான் எஸ். கே. வி. ஆறுமுகநாடார் அவர்களாலும் இனாமாகக் கொடுத்துதவப் பெற்றது போற்றத்தக்கதென்றும் கதர் நூல் நூற்று மகாத்மாகாந்தியவர்கள் படத்துக்கு கதர்மாலை போட்டிருப்பதும் தவிர மஹாத்மா இவ்விடம் விஜயம் செய்யும்போது நம வாசகசாலைக்கு வரவேற்று அவர்கள் மனம் திருப்தியடையும்படியாக எல்லோரும் கதர் அணிய வேண்டுமென்றுங்கூறி முடித்தார்கள். பின்பு அக்கிராசனருக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 10-மணிக்குக்கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசிகள் எழுதியிருக்கிறார்கள்.

## அத்திபட்டி.

திருமங்கலம் தாலுகா சாப்டூர் ஜமீன் அத்திபட்டி என்னும் கிராமத்தில் நம்மவர்கள் வீடு சுமார் 50 வரையுள்ளன. அவ்வூர் மகா-ள-ள-ஸ்ரீ கனம் ஸ்ரீமான ராம. பெ. சு. ராமய்யாநாடார் அவர்கள்வித்தியாசாலையொன்றுஏற்படுத்தி சுமார் மூன்று வருஷ காலமாய் 'இந்து எலிமெண்டரி ஸ்கூல்' என்னும் பெயருடன் நடத்திவருகிறார்கள். ஸ்கூலில் எக்காரணத்தினாலோ சுமார் ஒரு வருஷகாலமாய் ஒருவரும் மகமையைக் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். ஒவ்வொரு ஊரும் மகமையால் முன்னேறிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் என்ன காரியத்துக்காகத்தான் மகமை நிறுத்தினார்களென்றும் தெரியவில்லை. அத்திபட்டியில் வாழும் க்ஷத்திரியகுல சிகாமணிகள் இனியாகிலும் தயவுசெய்து மகமையை வசூல் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மதுரை மகாஜன சங்கத்தாராவது வந்து மகமையை நடத்திவைக்க ஏற்பாடுகள் செய்ய வேணுமென்பதாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

போ. பே. சங்கரலிங்கநாடார்,
ராம. ராமய்யாநாடார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நமது ஸ்காலர்ஷிப் லாட்டரியின் அறிக்கை.

1927-ம் வருடம் பிப்ரவரி மீ 12 உ மதுரையில் கூடிய நாடார் மகாஜன சங்கத்தின் விசேஷ ஜெனரல் மீட்டிங்கில் சமர்ப்பிக்கப் பெற்ற ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரியின் அறிக்கை.

அக்கிராசனாதிபதியவர்களே!

கனவான்களே!!

9-6-25ல் கூடிய நாடார் மஹாஜன சங்கம் 10-வது கான்பரன்ஸின் 12-வது தீர்மானத்தை ஒட்டியும், 10-6-25ல் கூடிய சாதா சங்கம் ஜெனரல் மீட்டிங்கின் 3-வது தீர்மானத்தை அனுசரித்தும் நமது ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரி ஆரம்பிக்கப் பெற்றது.

ஜெனரல் மீட்டிங்கின் தீர்மானத்திற்குப் பின்னால் அதன் வேலை ஆரம்பிக்கப் பெற்று புஸ்தகங்கள் அச்சடிக்கப்பட்டன. புஸ்தகங்கள் அப்பொழுது தேவையானவரை அச்சடிக்கப்பட்டவுடன் எல்லாவிடங்களிலுமுள்ள நாடார் குலச் சுவர்களுக்கும் தபால் மூலமாக அனுப்பப்பட்டது. முக்கியமாக 10-6-25ல் கூடிய ஜெனரல் மீட்டிங்கில் நியமிக்கப்பட்ட லாட்டரிக் கமிட்டி மெம்பர்கள் 18 பேர்களுக்கும் அவர்கள் ஆதரவை நாடி பல கடிதங்கள் எழுதப்பட்டன.

அதுவரை நடந்து வந்த காரிய அனுபவத்திலிருந்து சீட்டுவிற்பனை செய்பவர்களுக்கு தனிப்பிரைஸ் கொடுக்க வேண்டியது அவசியமெனத் தோன்றியதைக் கொண்டு 11-11-25ல் கூடிய கவுன்ஸில் மீட்டிங்கில் 7-வது தீர்மானமாக ரூ 7500 ஒதுக்கிவைக்கப்பட்டதோடு லாட்டரிக் கமிட்டிக்கு ஆலோசனை சொல்வதற்காக 5 பேர் சப்கமிட்டி மெம்பர்களாக நியமிக்கப் பட்டனர்.

இதுவரையிலும் தபால் மூலம் புஸ்தகங்கள் பலருக்கும் அனுப்பப் பட்டதேயன்றி அதனால் எவ்வித பலனையும் அடைந்தபாடில்லை. இந்த நிலைமையில் சங்கம் டிராவலிங் ஏஜெண்ட் ஸ்ரீமான் இ. கருப்பையா பிள்ளை அவர்களை 5-2-26ல் இரங்கூனுக்கும், ஸ்ரீமான் எ. யா. எஸ். அண்ணாமலை நாடார் அவர்களை 10-2-26ல் கொழும்புக்கும் அனுப்பினோம். அவர்கள் செய்த சுற்றுப்பிரயாணத்தில் நமது அபிமானிகளின் பேருதவியால் சிறிது பலன் கிடைத்தது.

இந்த நிலைமையில் காரியதரிசிகளில் ஒருவரான ஸ்ரீமான் சிவ. பெ. நா. சி. தங்கமணிநாடார் அவர்கள் தமது பதவியை விட்டு விலகிக் கொள்வதாக ராஜீநாமா லெட்டர் அனுப்பி விட்டார்.

15-4-26 முடிய, பல தலைவர்களுக்கும் பிரமுகர்களுக்கும் அதுவரை நடந்துள்ள வேலைகளின் நோக்கத்தை எடுத்துக் கூறி உடனே பிரசாரத்திற்கு வெளிக்கிளம்புமாறு லெட்டர்கள் மூலம் வேண்டிக்கொண்டோம். அந்தக் காகிதங்களை வாசித்துப் பார்த்தால் உண்மைக் குலாபிமானமுள்ள எவரும் மனக்கலங்கி கண்ணீர்விடாதிரார். ஆனால் அவர்கள் நமக்கு எவ்வித ஆதரவும் கொடுத்தார்களுமில்லை. எழுதிய காகிதங்களுக்கு பதில் விடுத்தார்களுமில்லை.

இது வரையும் நமக்கு கிடைத்த ரூபாய் ஆயிரத்துக்கும் குறைவாகவேயிருந்தது. இந்த நிலைமையில் நமக்கு என்ன செய்வது என்று தோன்றாமல் 25-4-26ல் கவுன்ஸில் மீட்டிங் ஒன்றை நடத்துவதெனத் தீர்மானித்து கவுன்ஸிலர் யாவருக்கும் நோட்டீஸ் அனுப்பியதோடு மீண்டும் தலைவர்களுக்கும் பிரமுகர்களுக்கும் தனித் தனியே அவர்கள் ஒத்தாசையை நாடி மீட்டிங்குக்கு விஜயம் செய்யும்படி விரிவான லிகிதங்கள் எழுதினோம். ஆனால் அதிலும் நமக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. 25-4-26ல் கூடிய மீட்டிங்கில் 2-வது தீர்மானமாக சங்கத்தின் நிர்வாகச் செலவுகளை கூடுமானவரையும் சுருக்கி நடத்தவேண்டுமென்றும் ஸ்காலர்ஷிப் லாட்டரி தலைவர்களுடையவும் அபிமானிகளுடையவும் ஒத்தாசையைக்கொண்டு காரியதரிசி அவர்கள் பிரயாணத்திற்கு கார் வாங்கி தீவிரமாய் நடத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டதோடு ஸ்ரீமான் சி. வ. பெ. நா. சி. தங்கமணி நாடார் அவர்களின் ராஜீநாமா லெட்டர் ஒப்புக்கொள்ளப் பட்டுவிட்டது.

இப்படி நாம் பலவழிகளிலும் கஷ்டமடைந்து காரியத்தை முடிக்கமுடியுமோ வெனக் கலங்கிக் கொண்டிருந்த காலத்தில் சர்வவல்லமையுள்ள சாக்ஷாத் சர்வஜீவ தயாபரனை தன்வயப்படுத்தும் அன்பென்னும் உத்தமப் பொருளை சந்தாவாக சகலரிடமிருந்து பெற்று தங்கள் பொக்கிஷத்தில் நிறப்பிக் கொண்டிருப்பதான நாடார் ஊழியப் பிரசாரசபையார் நம்மிடம் வந்து இக்காரியத்தைத் தாங்களே முன் நின்று நடத்திவைப்பதாகவும் அதனால் ஏற்படுத்தும் பொறுப்பை தாங்களே ஏற்றுக் கொள்வதாகவும் உறுதிமொழிகூறி உற்சாகப்படுத்தி நம்மைச் சுற்றுப்பிரயாணத்திற்கு ஆயத்தமாகும்படி துரிதப்படுத்தினார்கள்.

அப்பால் பல்லாயிரக் கணக்கான வால்போஸ்டர்களும் விளம்பர அட்டைகளும் தயாரித்து பலவிடங்களுக்கும் அனுப்பியதோடு பத்திரிகைகளிலும் பலதர பிரசாரம் செய்யப்பட்டது.

லாட்டரியின் சுற்றுப்பிரயாணத்திற்கென்றே காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார் அவர்களிடம் முன் பணம் பெற்று வாங்கிய மோட்டார் வாகனத்தில் காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார் அவர்களும் டிராவலிங் ஏஜெண்ட் ஸ்ரீமான் எஸ். ஆர். மூக்கநாடார் அவர்களும் 11-5-26ல் காலை லாட்டரியின் தீவிர முயற்சியில் ஈடுபட்டு மதுரையினின்றும் புறப்பட்டார்கள். ஆங்காங்குள்ள அபிமானிகளின் ஆதரவைக்கொண்டு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி இம் மூன்று ஜில்லாக்களிலும் 28-6-26 வரை சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். இவர்கள் பகீரதப்பிரயத்தனங்கள் செய்தும் பொதுஜனங்களின் மனதில் இச்சிறிய காலத்திற்குள் இவர்கள் எந்த வழியில் சிறந்த பிரசாரம் செய்தாலும் இரண்டு லக்ஷம் ரூபாய்கள் சேர்த்து விடமுடியுமாவென உண்டான ஓர் வித சந்தேகத்தால் பிரைஸ் தினமான 30-6-26 முடிய ரூ 27820 மட்டும் வந்து சேர்ந்தது. இந்த மட்டிலும் லாட்டரியை பிரைஸெடுத்து விடுமாறு நமக்கு பலர் கடிதமூலமாயும் நேரிலும் வற்புறுத்தினார்களெனினும் பல அபிமானிகளுக்கும் உண்டான அவாவால் 30-6-26ல் ஓர் ஸ்பெஷல் கவன்ஸிலைக் கூட்டிவைத்தோம். அதில் 3-வது தீர்மானமாக செப்டம்பர் மீ 12உக்கு பிரைஸ்தினம் ஒத்திவைக்கப்பெற்றதோடு ஸ்ரீமான் ஆ. அ. ஆறுமுகநாடார் அவர்கள் ஒரு காரியதரிசியாகத் தெரிந்தெடுக்கப் பட்டார்கள்.

அப்பால் மீண்டும் காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாண்டியநாடார் அவர்கள் தமது சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பித்து திருவனந்தபுரம், இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை இந்த ஜில்லாக்களில் பெருங்கிளர்ச்சியை யுண்டுபண்ணி வந்தார்கள். டிராவலிங் ஏஜெண்டுகள் மூவரும் பலபாகங்களுக்கும் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் செய்த தீவிர வேலையினால் நல்லபலன் கிடைத்ததோடு தூத்துக்குடியில் ஸ்ரீமான் அரி. அ. செ. கந்தசாமி நாடார் அவர்கள் செய்த வேலையானது பெரும்பலனைத் தந்தது.

திருச்சிராப்பள்ளி ஸ்ரீமான் ப. மு. ராமசாமிநாடார் அவர்கள் விருப்பத்தால் கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சை, மாயவரம், கும்பகோணம், சென்னை முதலிய விடங்களில் தகுந்த பிரசாரம் செய்தால் நமது நோக்கத்திற்கேற்ற பலன் கிடைக்குமெனத் தோன்றியதைக் கொண்டு மேற்கண்ட விடங்களில் தீவிரமாக வேலைசெய்து ஜெயக்கொடி நாட்டுவதற்காக குல முன்னேற்றமே தன்னேற்றமாகக்கொண்ட ஸ்ரீமான்கள் நாடார் ஊழியப்பிரசாரசபைத் தலைவர் ப. வ. சோமசுந்தரநாடார் அவர்களும் நாடார்பிரஸ் மானேஜிங்டைரக்டர் ஆ. க. முத்துக்குமாரசாமி நாடார் அவர்களும் 29-7-26ல் மதுரையினின்றும் புறப்பட்டார்கள். சுமார் ஒருமாதகாலமாய் அவர்கள் செய்த வேலையால் எதிர்பார்த்தபலன் கிடைத்தது.

பிரைஸ் தேதியன்று தலைமை வகித்து காரியங்களை நடத்துவதற்காக தலைவர்களைத் தெரிந்தெடுப்பதற்கு 23-8-26ல் கவுன்ஸில் கூடிற்று. அதில் 33 கனவான்கள் சேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் அதில் பெரும்பாலோர் பிரைஸ் தினத்தன்று விஜயம் செய்யாதிருந்தது விசனிக்கத்தக்கது.

30-6-26ல் கூடிய ஸ்பெஷல் கவுன்ஸிலின் தீர்மானப்படி 12-9-26ல் சில காரணங்களால் பிரைஸ் எடுக்க முடியாது போய்விட்டபடியால் 17-9-26 பகல் 2-மணிக்கு மதுரை முனிஸிபல் சேர்மன் ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடுகாரு பி.ஏ. பி.எல். பாரிஸ்டர் அவர்கள் தலைமையின் கீழ் பிரைஸ் எடுக்க ஆரம்பிக்கப்பெற்றது.

ஜெனரல் மீட்டிங்கில் முன்னால் தீர்மானித்தபடி இரண்டு லக்ஷம் ரூபாய்கள் வசூலாகாது, ரூ 88018-12-9 மட்டும் வசூலானபடியால் 8160 பிரைஸாக ரூ 35000 பிரைஸ்கிடைக்கப்பெற்றவர்களுக்கு கொடுப்பதென்றும் தனிப்பிரைஸ் 1598 பிரைஸ்களாக ரூ 3500 கொடுப்பதென்றும் தீர்மானிக்கப்பெற்ற விபரம் அக்கூட்டத்தில் பிரசங்க வாயிலாகவும் நோட்டீஸ் மூலமாகவும் அறிவிக்கப் பட்டது.

பிரைஸ் எடுக்கும் விதமானது பொதுஜனங்களின் மனதை குதூகலிக்கச்செய்யும் முறையில் அமைக்கப் பெற்றது. 17—9—26 முதல் 26—9—26 முடிய இராப்பகலாய் பிரைஸ் எடுக்கப்பெற்ற கடவுள் கிருபையாலும் அபிமானிகளின் ஆதரவாலும் நமது காரியம் இனிது நிறைவேறிற்று. இச்சந்தர்ப்பத்தில் நமது லாட்டரியின் வெற்றியை முன்னிட்டு நமது "நாடார்குல மித்திரன்" பத்திரிகை செய்த அரிய ஊழியம் மிகவும் போற்றத்தக்கது. அதன் உதவியினாலும் ஆதரவினாலுமே நாம் லாட்டரியை ஜெயம்பெற முடிக்க அனுகூலமாகவிருந்ததைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை. நம்மித்திரன் பத்திரிகை நம்ஜன சமூகத்துக்கும் நம் மஹாஜன சங்கத்துக்கும் இனியும் தளராஊக்கத்துடன் உழைக்கக் கங்கணங்கட்டியுள்ளதால் நாடார்குலத்தில் பிறந்த ஒவ்வொருவரும் நம்மித்திரனை தவறாமல் வாங்கி ஆதரிப்பது முதற்கடமையாகு மென்பதை தெரிவித்துக்கொள்கிறோம். அதன் அபிவிருத்தியைக்கோரி ஆரம்பிக்கிற க்ஷேமநிதிலாட்டரிச்சீட்டுகளையும் ஒவ்வொருவரும் வாங்குவதுடன் அவரவர்கள் சக்திக்கேற்றவாறு புஸ்தகங்களை ஏராளமாக விற்றுக்கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

ஏழைமாணவர்கள் பால் கிருபை கொண்டு அரும்பெரும் முயற்சிகள் எடுத்துக்கொண்ட நாடார்குல மித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் கு. ஆ. முத்துநாடார் அவர்களுக்கும், சென்னை ஸ்ரீமான் என். வி. ஷண்முகம் கம்பெனியின் சொந்தக்காரர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசநாடார் அவர்களுக்கும், திருத்தங்கல் க. ச. பழனிச்சாமிநாடார், கோலாலம்பூர் எ. மஹாலிங்கமூர்த்திநாடார், ஜி. எஸ். டி. தாஸன்நாடார், சிலோன் டி. ஜி. மணிநாடார், ஐ. டேவிட்நாடார், மதுரை வி. பி. இரத்தினசாமிநாடார், ப. மு. சு. கந்தசாமிநாடார், பெ. சு. பெரியசாமிநாடார், பூ. பெ. பெ. சிதம்பர நாடார், மா. சீ. பொன்னையா நாடார், மா. வேல்நாடார், எட்டையாபுரம் கு. மாரியப்பநாடார், சிவகாசி கா. ச. மு. தங்கப்பநாடார், ஸ்ரீவைகுண்டம் என். தங்கையா நாடார், ஆகியவர்களுக்கும், இலங்கை, தென்ஆப்பிரிக்கா, கோலாலம்பூர், ஜேகூர்பார், பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா, இரங்கூன், முதலிய ஜலப்பிரதேசங்களிலுள்ள அபிமானிகளுக்கும் சென்னை, தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், முதலிய ஜில்லாக்களிலுள்ள அபிமானிகளுக்கும் லாட்டரியின் வேலையை பொறுப்புடன் ஏற்று நடத்திவந்த நாடார் ஊழியப்பிரசாரசபையாருக்கும் எங்கள் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துவதோடு அவர்களுக்கு ஜாதிய சேவையில் உற்சாகத்தையும் திடசாதித்தையும் தந்தருளுமாறு இறைவனை இறைஞ்சுகின்றோம்.

### ஸ்காலர்ஷிப் லாட்டரி வரவு:செலவு கணக்கு விபரம்.

1927-ம் ஹு பிப்ரவரி மீ 12உ

| விபரம். | பற்று ரூ. அ. பை. | வரவு ரூ. அ. பை |
|---|---|---|
| லாட்டரிச்சீட்டு விற்ற வரவு. | | 88018-12-9 |
| தகுந்த ஆதாரமின்றி கொடுக்கப்படாமலிருப்பதும் மணிஆர்டர் டெலிவரி ஆகாது வாபஸ் வந்ததுமாக வரவு | | 6201-14-0 |
| பிரைஸ்க்கு பணம் கொடுத்தது. | 38500-0-0 | |
| பேப்பர் அச்சுக்கூலி கணக்கு | 2646-1-0 | |
| சில்லரைச் செலவு கணக்கு | 990-12-1 | |
| தந்தி தபால் கணக்கு | 788-12-6 | |
| சுற்றுப்பிரயாணச் செலவு கணக்கு | 2827-8-5 | |
| சம்பளக் கணக்கு | 1896-13-8 | |
| நாடார்மஹாஜன சங்கப்பற்று எஸ். நீதிதாஸ்நாடார்வசம் ரூ 107-2-11ம் எஸ். வசுதாஸ்நாடார் வசம் ரூ 100-0-0-ம் எஸ். ஆர். மூக்கநாடார் வசம் ரூ 47-0-0-ம் எ. வே. முத்துக்குமார் நாடார் வசம் ரூ 76-15-6-ம் எஸ். பி. சைமன் பீட்டர்நாடார் வசம் ரூ 58-0-0-ம் ஆ. ரா. சாமுவேல்நாடார் வசம் ரூ 26-0-0-ம் எம். முத்துவைகுண்டநாடார் வசம் ரூ 77-0-0மாக ரூ | 492-2-5 | |
| இருப்பு இந்தியன் பேங்க் கணக்கு | 46078-8-8 | |
| ஆக பற்று வரவு ரூ | 94220-10-9 | 94220-10-9 |

பா. ம. பாண்டியநாடார்,
ஆ. அ. ஆறுமுகநாடார்,
காரியதரிசிகள்.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

வே கூடாது. இதரபாங்கில்போட வேண்டும். ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமிநாடார் கூறியவண்ணம் வார்ப்பாண்டிலும் போடலாமென்றார்.

விருதுநகர் ஸ்ரீமான் வே. வ. சண்முகநாடார் எழுந்து பலத்த குரலில் இதுவரையும் பேசிய நமது தலைவர்கள் நமமை ஒரு ஸ்திரமான நிலைமையில் மனம் வைக்க வழிகாட்டாமல் அவரவர் மனப்பான்மைக்கெல்லாம் நம் மனம் செல்லுமாறு பேசிவிட்டார்களென்று கூறிவிட்டு, நம்முன்னோர் முறைகள் நன்னிலைமையிலிருந்தனவென்றும், ஸ்ரீமான் பொன்னையாநாடார் அதைக் கண்டித்தது விசனிக்கத்தக்கதென்றும் கூறிவருகையில் சபையில் கேளுங்கள் கேளுங்களென்ற கூச்சலும் வெட்கம் வெட்கம் என்ற கூச்சலும் செவிபடமுழங்கின. குழப்பம் ஏற்படும் போற்காணப்பட்டது. உபந்யாசகர் பின்னர் சிறிதுநேரம் பேசினார். அவர் எதை ஆதரித்துப் பேசினார்; அவருடைய நோக்கம் என்னவென்றறிய முடியாதவாறு பேசி முடித்து விட்டார். முடிவில்இரண்டு திருத்தங்களும் தோற்றுப் போயின. மதுரையில சொத்து வாங்க வேணுமென்ற ஆதித் தீர்மானமே நிறைவேறப் பெற்றது.

உடனே ஸ்ரீமான்கள் செந்திக்குமாரநாடார், பழனிச்சாமிநாடார், ஆறுமுகச்சாமிநாடார் முதலிய சில பேர்கள் நிறைவேறிய தீர்மானங்கள் சரியில்லையென்பதற்கறிகுறியாக கூட்டத்தைவிட்டு வெளியேறிவிட்டார்கள். பின்னர் விஷயப்பத்திரத்திற்கண்ட சில விஷயங்கள் கவன்ஸிலுக்கு அனுப்புவதெனவும், சில தீர்மானங்கள் விவாதமின்றி ஏகமனதாகவும் நிறைவேற்றப்பெற்றன. இரவு 9½ மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நல்ல தருமம்! நல்ல தருணம்!! நல்ல லாபம்!!!

## அருப்புக்கோட்டை

## "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி

## தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

## மொத்தம் சீட்டுகள் 33000.

சீட்டு 1-க்கு ரூ 1.

## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-ஹு மே மீ 4 ௨ க்கு பிரபவ ஹு சித்திரை மீ 22 ௨ பிரைஸ் எடுக்கக்கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

2-வது பிரைஸ் ரூ 1500 3-வது பிரைஸ் ரூ 1000
4-வது பிரைஸ் ரூ 500

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 200 ரூ-ல் 2-க்கு | ரூ | 400 | 100 ரூ-ல் 5-க்கு | ரூ | 500 |
| 50 ரூ-ல் 20-க்கு | ரூ | 1000 | 20 ரூ-ல் 50-க்கு | ரூ | 1000 |
| 10 ரூ-ல் 100-க்கு | ரூ | 1000 | 5 ரூ-ல் 200-க்கு | ரூ | 1000 |
| 3 ரூ-ல் 600-க்கு | ரூ | 1800 | 2 ரூ-ல் 2400-க்கு | ரூ | 4800 |

ஆக பிரைஸ்கள் 3381-க்கு ரூ 17500
புக் 1500-க்குக் கமிஷன் ரூ 3000
குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் வகையறாக்கள் ரூ 1800
தனிப் பிரைஸ் ரூ 1700 பண்டுக்கு ரூ 9000
ஆக ரூ 33000

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

சகல விதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

### விசேஷக் கமிஷன்.

நூறு ரூபாய்க்கு மொத்தமாகச் சீட்டு விற்றுக் கொடுப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் விசேஷக் கமிஷன் கொடுக்கக்கூடும்.

### தனிப் பிரைஸ் விபரம்.

I-வது பிரைஸ் ரூ 100. 2-வது பிரைஸ் ரூ 50
3-வது பிரைஸ் ரூ 20 4-வது பிரைஸ் ரூ 15
5-வது பிரைஸ் ரூ 10
6-முதல் 10 வரை 5வீதம் ரூ 25
11-முதல் 750-வரை 2 வீதம் ரூ 1480
ஆக ரூ 1700

தனிப்பிரைஸ், இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகள் பத்துப் பிரைஸ்களே இருப்பதால் 22 சீட்டுள்ள இரண்டு புஸ்தகம் விற்றவர்கள் தனிப் பிரைஸுக்காக ரூ 2-ம் பிடித்துக்கொண்டு ரூ 38 மட்டும் அனுப்பலாம். தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ள விருப்பமுடையவர்கள் தனிப் பிரைஸ் ரூ 2 பிடித்துக் கொள்ளாமல் ரூ 40-ம் அனுப்பிவைக்கவேண்டும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்கள் விசேஷக் கமிஷன் ரூ 5 ம் பிடித்துக்கொண்டு மீத ரூபாயை அனுப்பி வைக்கலாம். தனிப் பிரைஸுக்குரிய ரூபாயை அனுப்பினால் தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ளப்படும். அதற்குப் பிரியமில்லையானால் அதற்குரிய ரூ 5 யும் பிடித்துக் கொண்டனுப்பலாம்.

சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.
செ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை

[2-ம் பக்கத்தின் தொடர்பு.]

செய்து படித்துவந்த ஆசிரியரோ, அன்றி எளிய செலவை வேண்டி வந்த மாணவரோ, அன்றி இப்பொருட்கள் நயத்தையறியாத அதிகாரிகளோ யார் அவற்றை ஆகப்பண்ணுவது? எளிய விலையில் இனிய கல்வியைக்கொடுக்க முன்வந்த அரசாங்கத்தார்க்கும், வாங்க வந்த மாணார்க்கும் முடிவிற் பயன் என்னே! அரசாங்கத்தார் பணமும் மாணவர் பணமும் உவர் நிலத்திலிட்ட உரம்போலும் பாம்புக்கு வார்த்த பால் போலும் பயனிலாது போயின்றன.

எல்லாரும் பள்ளிக்கூடம் வைத்து நடத்துகிறார்களே நாமேன் செய்யக்கூடாது என்று அதிகாரிகள் அவையினர் எண்ணுவதும் என்னைப் போல் மனிதன்தானே தலைமையாசிரியனென்றனன்; நானேன் இருத்தல்கூடாது என்று எளிய கல்விதானே வேண்டும் என்று இத்தகைய போலிப்பெருந்திண்ணைப்பள்ளிக்கூடங்களை மாணவர் நண்ணுவதும், சொக்கனுக்குச் சட்டியளவு என்றபடி உத்யோகம் தானே வேண்டுமென்று கல்விக்களஞ்சியங்கள் இப்பள்ளிகளை நாடுவதும் தம்மைத்தாமே கெடுத்துக் கொள்வதற்கு ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ளும் முயற்சியாகும்.

எளிய விலையில் இனிய கல்வி கொடுக்க அரசாங்கத்தார் விரும்பிக்கொண்டிருக்க காரியம் பிள்ளையார் கொள்ளப்போய்க் குரங்காக முடிந்தது! பெருந்திண்ணைப் பள்ளிக்கூடமே பெரியார் உன்னை நிறுவிய நோக்கமென்னை? நீ இப்போது இருக்கும் ஆக்கமென்னை?

## எலிமெண்டரி பாட ரத்தினங்கள்.

லிவிக்ஸ், நேச்சர் ஸ்டடி ஸயன்ஸ் அடங்கியது. எல்லாப் பாடசாலைகளுக்கும் உபாத்திமாருக்கும் மிகவும் அவஸியம். 3-ம் பதிப்பு விலை அணா 14. இது ஆசிரியரிடமும், சென்னைவேப்பேரி, எஸ். பி. வி. கே. டிப்போவிலும் கிடைக்கும்.

### ஜெம் வக்கபிளரி.

இங்கிலீஷ் தமிழ் முதல் புஸ்தகம் 6 அணா; 2-ம் புஸ்தகம் 8 அணா. 6 மாதத்தில் இங்கிலீஷ் பேச எழுத லேசாய்க்கற்க எல்லாருக்கும் மெத்த அவஸியம். ஒரு நேர்த்தியான லெட்டர் ரைட்டரும் அடங்கும். இது ஆசிரியர் நாகபட்டணம் மிஷின் ஹைஸ்கூல் ஆசிரியர எஸ். வி. கோயில்பிள்ளையிடமும் ஆரணி மிஷன் பிரஸிலும், ஷை சென்னை எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும். உபாத்திமாருக்கும் வியாபாரிகளுக்கும் 12 ஜதைக்குமேல் விசேஷித்த கமிஷன்.

உங்கள் வீட்டில் எந்த சமயங்களிலும் செவிக்கு இனிமையான பல சங்கீதப் பாட்டுக் கச்சேரி இனி நடைபெறும்.
100 ரூபாய் பெறும்படியான பெரிய கிராமபோன் (Gramaphone) போலவே பாடக்கூடிய அளவில் செய்யப்பட்ட

## மினியேஜர் கிராமபோன்.



ஜெர்மன் தேசத்தில் ஓர் தொழிற்சாலையில் மாத்திரம் தயாரிக்கப்பட்டது. லண்டன் நகர் வர்த்தகர்களுக்கும், குடும்பஸ்தர்க்கும் ஆயிரக் கணக்காய் செலவிடப்பட்டது. தற்சமயம் எங்களால் ஜெர்மன் தொழிற்சாலையிலிருந்தே தருவிக்கப்பட்டது. பாட்டுகளை சப்திக்கும் இயந்திரங்களுடன் பார்வைக்கு அழகாயும், பற்பல அதிசயங்களுடனும் பாட்டுகள் பாடக்கூடியது. சயிஸ் 6"–6"; பிளேட் 5½"; உயரம் 4" உள்ள கிராமபோன் பெட்டி 1-ம், பல தினுசு பாடும் டபிள் சயிட் ரிகார்டு 1-ம், ஊசிகள் பாக்கட் 1-ம், செட் 1-க்கு விலை ரூ 8—8—0. தனி டபிள் சயிட் ரிகார்டு (தட்டு) 1-க்கு ரூ 1. ஊசிகள் பாக்கட் 1-க்கு அணா 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்ப வேண்டும். பாக்கிங் போஸ்டேஜ் ரூ 1—6—0.

விலாசம்:—
ஓவர்சீஸ் சுவிஸ் வாட்சு கம்பெனி,
[illegible] ரோடு, [illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection